பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆனி 28உ (12—7—67) புதன் ★ வெளியூர்: ஆனி 29உ (13—7—67) வியாழன் [இதழ்: 24

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி:

முன்னாள் முதலமைச்சர்மீது நடவடிக்கைஎடுக்கப்படுமா?

பாதிக்கப்பட்டோர் குடும்பங்களுக்கு இழப்புஈடு உண்டா?

மாண்ட மாணவ மணிகளுக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்தப்படுமா?

சட்டமன்றக் கேள்விகளுக்கு

முதலமைச்சர் அண்ணா அளித்த பதில்கள்

சென்னை, ஜூலை 12—

"முன்னாள் முதலமைச்சர் மாணவர்களைச் சந்திக்க மறுத்ததாலும், 144 தடையுத்தரவு பிறப்பித்ததாலும், இராணுவத்தைத் தருவித்துக் காட்டுதர்பார் நடத்தியதாலும் தான் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் பல இழப்புக்கள் ஏற்படக் காரணம் என்பதால், எல்லாவற்றிற்கும் காரணகர்த்தராக விளங்கிய முன்னாள் முதலமைச்சர்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?"

என்று, இன்று சட்டமன்றத்தில் கழக உறுப்பினர் திரு. ஆலடி அருணா ஒரு துணைக் கேள்வி எழுப்பினார்; இதற்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பின்வருமாறு விடையளித்தார்:—

"அப்படிப்பட்ட ஒரு கருத்துப் பரவலாக இருந்துவருகிறது. ஆனால் முன்னாள் முதலமைச்சர் மீது நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை."

"இம்மாநிலத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தினால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு? அதைச் சரிகட்ட அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?"

என்று காங்கிரசு உறுப்பினர் கேட்ட மூலக் கேள்விக்கு முதலமைச்சர் அண்ணா பின்வருமாறு விடையளித்தார்.

"இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியினால் ரூ. 6,18,628 இழப்பு ஏற்பட்டது. இதனை எவ்வழியிலும் வசூலிக்க இயலாது என்று கருதுவதால், கணக்கிலிருந்தே இத்தொகையை அகற்றிவிட அந்தத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

கேள்வி:—"இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஏற்பட்ட உயிர்ச்சேதம் எவ்வளவு?"

விடை:—'உயிர்ச்சேதம், கிளர்ச்சியினால் ஏற்பட்டதல்ல; போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியதால் ஏற்பட்டதாகும்."

கேள்வி:—"கிளர்ச்சியினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இழப்புஈடு கொடுக்கப்படுமா?"

பதில்:—"நான் உட்பட பலர் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லோருக்கும் இழப்பு ஈடு கொடுக்க வேண்டும் என்று கருதவில்லை. அப்படி யாரேனும் இழப்பீடு பெறவேண்டிய நிலையில் இருந்தால் அது பற்றி யோசிக்கப்படும்."

கே. எம். இராசகோபால்:—"முன்னாள் முதலமைச்சர் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்காததால்—'முந்திய அரசுக்கு இந்த அரசு அஞ்சி நடக்கிறது' என்று மக்கள் கருதுவதால்—நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா?"

பதில்:—"இந்த அரசு, அஞ்சி நடக்கவில்லை — அன்போடு நடந்துகொள்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்."

கேள்வி:—"கொல்லப்பட்ட போலீசு அதிகாரிகளின் குடும்பங்களுக்கு இழப்பு ஈடு கொடுக்கப்பட்டதா?"

பதில்:—"எவ்வளவு கொடுக்கப்பட்டது என்ற விவரம் கையில் இல்லை; என்றாலும், கணிசமான அளவுக்கு அவர்கள் குடும்பங்களுக்கு இழப்புஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது."

மா. இராசாங்கம்:— "எரிக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தொடர்பான 'பைல்'கள் இன்னும் இருக்கின்றன என்றும், இந்தக் கட்டிடத்தில் இல்லையென்றாலும் வேறு எங்கோ ஓர் இடத்தில் இருக்கின்றன என்றும் சொல்லப்படுவது உண்மையா?"

பதில்:—"அதைப்பற்றிய தகவல் தெரிந்தால், அதனை என்னிடம் தனியாக வந்து கூறினால் நலமாக இருக்கும்."

எஸ். இராமச்சந்திரன்:—"இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது நடத்தப்பட்ட தடியடி, துப்பாக்கிப்பிரயோகம் முதலிய நடவடிக்கைகளையும், பாதிக்கப்பட்டவர்களையும் பற்றிய முழுவரலாற்றைப் புத்தக வடிவில் உருவாக்கி, அதைக் கொண்டு பாதிக்கப்பட்ட குடும்பங்கட்கு இழப்பு ஈடு கொடுக்க அரசு முன்வருமா?"

பதில்:—"இழப்பு ஈடு கொடுப்பதற்காக அரசு, வரலாறு உருவாக்கத் தேவையில்லை. இந்தி எதிர்ப்பு வரலாற்றைத் தமிழர்கள், தாங்களே வெளியிட்டுக் கொள்வார்கள்."

கோவிந்தராசன்:—"மதுரையில் மாணவர்களை வெட்டியவர்கள் மீது மீண்டும் நடவடிக்கை எடுக்கப்படுமா? பாதிக்கப்பட்ட மாணவர்கட்கு நட்ட ஈடுகொடுக்கப்படுமா?"

அண்ணா:—"ஏற்கனவே அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டாகிவிட்டது. இனி எடுக்கத் தேவையில்லை. பாதிக்கப்பட்டவர்கட்கு மாணவர்களுக்குள்ளேயே ஏதோ நிதி திரட்டி உதவி செய்ததாகக் கேள்விப்பட்டேன். மேலும் அவர்கட்கு உதவி செய்யவேண்டிய நிலை இருக்குமானால், அது பற்றி இந்த அரசு கவனிக்கும்."

வி. கே. கோதண்டராமன்:—"இந்தி எதிர்ப்பில் எத்தனை பேர் இறந்தார்கள்—அவர்கள் குடும்பங்கட்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுமா? தற்போதைய முதல் அமைச்சர் இருக்கிறாரா-இறந்துவிட்டாரா என்கேட்ட போலீசு அதிகாரியின் பெயர் என்ன?"

அண்ணா:—"கேள்வியின் முந்திய பகுதிகளுக்கு முதலிலேயே பதிலளித்துவிட்டேன். பிந்திய பகுதிக்கு நான் பதிலளிக்கப் போவதில்லை."

பீர் முகம்மது:—"தாய் மொழியைக் காக்கத் தவச் செல்வர்களான மாணவ மணிகள், தங்கள் இன்னுயிரை அநியாயமாக ஈந்தனரே — அவர்களுக்கெல்லாம் நினைவுச் சின்னம் ஏற்படுத்தப்படுமா?"

அண்ணா:—"அவர்களுக்கெல்லாம் நிரந்தரமான நினைவுச் சின்னம், நம் இதயத்தில் அவர்கள் நினைவு இருப்பதுதான்!"

பூட்டான்—சிக்கிம் அருகில் செஞ்சீனப் படை

பொதுவுடைமைச் சீனாவின் செஞ்சேனையின் தனி மலைப்படை இப்போது பூட்டான், சிக்கிம் எல்லைகளுக்கு அருகில் நெருக்கமாக வந்துள்ளன. இங்கு நாள்தோறும் ஒத்திகைகளை நடத்துகின்றன.

பூட்டான், சிக்கிம் பகுதிகள் மீதான தங்கள் உரிமையை நிறைவேற்றிக் கொள்வதற்கான முயற்சிகளை சீனத் தலைவர்கள் அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று மாஸ்கோ வானொலி அறிவித்தது.

வன்முறைச் செயல்—737 பேர் கைது

கல்கத்தா, ஜூலை 11—

கடந்த இரண்டு திங்களில் மேற்கு வங்கத்தில் 180 அரிசிக் கொள்ளைகள் நடந்திருப்பதாகவும், 100 இரயில் நிறுத்த வன்முறைச் செயல்கள் நிகழ்ந்திருப்பதாகவும் முதலமைச்சர் அஜாய் குமார் முகர்ஜி, சட்டமன்றத்தில் அறிவித்தார்.

அரிசிக் கொள்ளைகள் தொடர்பாக 625 பேரும், இரயில் நிறுத்தத் தொடர்பாக 112 பேரும் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

நிதி நிலைமை சீர்பட்டதும் அதிக நிதியுதவி

கடனுதவிகுறைப்புப்பற்றி முதலமைச்சர் விளக்கம்

சென்னை, ஜூலை 11—

மாநில அரசு வழங்கும் கடன்கள், முன்பணங்கள் ஆகியவற்றுக்கு ரூ. 3,09,894.90-க்கான மானியக் கோரிக்கை சட்டமன்றத்தில் நிறைவேறியது.

நகராட்சிகளுக்குத் தரப்படும் மானியங்களும், கடன்களும் குறைக்கப்பட்டிருப்பது குறித்துக் கூறப்பட்ட புகார்களுக்குப் பதிலளிக்கையில், முதலமைச்சர் அண்ணா குறிப்பிட்டதாவது:—

"நிதி நிலைமையைப் பொறுத்தும், எதிர்பாராத சிக்கல்களாலும் தான் தொகையைக் குறைக்க நேர்ந்தது.

நிதி நிலைமை சீர்பட்டதும், குறைக்கப்பட்ட தொகைகள் அதிகப்படுத்தப்படும்.

நகரசுத்தித் தொழிலாளர்கள் வீடு கட்டிக்கொள்ளுவதற்குத் தேவையான மனைகள் வழங்குவதிலும் அரசு முனைந்து நிற்கும்."

'அரசின் கொள்கையை அதிகாரிகள் ஏற்க வேண்டும்'

'தவறினால் நடவடிக்கை எடுக்கத் தயங்கோம்'

தொழில் துறைகளில் தொழிலாளர்கள் நலச் சட்ட அமுல்—சட்டமன்றத்தில் அமைச்சர் செ. மாதவன் விளக்கம்

சென்னை, ஜூலை 11—

"தொழிலாளர் நலச் சட்டங்களை அமுலாக்கும்போது, அவ்வப்போது தொழிலாளர் கோரிக்கைகளைப் பாதுகாத்து உதவ இந்த அரசு தயாராக இருக்கிறது. உயர் நீதிமன்றத்தில் தொழிலாளர்களுக்காக வாதாட சட்ட உதவி கொடுக்க அரசு முன்வந்திருக்கிறது. இந்த முறை வெற்றிகரமாக நடைபெறுவதைப் பொறுத்து, மாவட்டத் தொழில் நீதிமன்றங்களிலும் சட்ட உதவி அளிப்பது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

"அரசுத் துறையில் உள்ள தொழிற்சாலைகளில் தொழிற் சட்டங்கள் எந்த அளவுக்கு அமுலாக்கப்படுகின்றன என்ற விவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது; அந்த விவரம் சேகரித்து முடிந்ததும், அந்தச் சட்டங்களை அமுலாக்க நடவடிக்கை எடுக்கப்படும்"

என்று, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. செ. மாதவன் சட்டமன்றத்தில் விளக்கினார்.

தொழிலாளர் நல இலாகாவுக்கு ரூ. 2,32,10,200-க்கான மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவரங்களுக்குப் பதிலளிக்கையில், அமைச்சர் மேலும் கூறியதாவது:—

அதிகத் தொகை கிடைத்ததும்!

தொழிலாளருக்கு வீடு கட்டித் தரும் திட்டத்திற்கு மத்திய அரசு தரும் உதவித் தொகை குறைக்கப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து அதிகத் தொகை கிடைத்ததும் இந்த வசதி விரிவுபடுத்தப்படும்.

பழிவாங்க அனுமதியோம்!

பொதுவாகத் தொழிலாளர்கள் பழிவாங்கப்படாமல் இந்த அரசு பார்த்துக்கொள்ளும்.

சட்டத்தின் மூலம் இயலாது!

தொழிலாளர் இயக்கங்களை அரசியல் நோக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்வது நல்லதல்ல. 'ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்' என்று எல்லாக் கட்சிகளும் சொல்லுகின்றன; ஆனால் நடைமுறையில் அப்படிக் காணோம்!

ஆகவே, சட்டத்தின் மூலம் தொழிலாளர் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. மனிதாபிமான உணர்ச்சியோடு ஒழுங்கு விதிமுறைகளை அரசியல் தலைவர்கள் வகுத்துக் கொண்டால் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம்.

பீடித் தொழில்—தென் மாநிலங்களுக்கு ஏற்ப சட்டம்

பீடித் தொழிலாளர் சட்டத்தைப் பொறுத்தவரையில், இதை நம் மாநிலத்தில் அமுலாக்கினால், நம் பீடித் தொழில் பாதிக்கப்படும்.

மத்திய அரசு கொணர்ந்துள்ள சட்டம்பற்றி தென் மாநில அமைச்சர்களுடன் விரைவில் ஆந்திராவில் பேச்சு நடத்த உத்தேசித்துள்ளேன். தென் மாநிலங்களுக்கு ஏற்றதாகச் சட்டம் அமைவது குறித்து ஆலோசிக்கப்படும்; பிறகு இதை அமுலாக்குவதுபற்றி பரிசீலிக்கப்படும்.

நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயங்காது!

மத்திய அரசு நடத்தும் தொழிற்சாலைகளில் சட்டங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. 'தொழிலாளருக்குப் பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை' என்று புகார் கூறப்பட்டது. இப்படி ஒரு நிலைமை இருந்தால் ஆராயப்படும்.

அதிகாரிகள், தொழிலாளர்களைத் தனி சாதி என்று நினைக்கிறார்கள்! இந்த எண்ணம் கூடாது. இன்றைய அரசின் கொள்கைகளை ஏற்று அதிகாரிகள் செயல்படுகிறார்களா என்று பரிசீலிக்கப்படும்.

(3-ம் பத்தி பார்க்க)

(5-ம் பத்தி தொடர்ச்சி)

எந்த அதிகாரியும் அரசின் கொள்கையை அமுலாக்காவிட்டால் அவர்மீது நடவடிக்கை எடுக்க அரசு கொஞ்சமும் தயங்காது!

தொழிலாளர்களின் சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்கு எதிராகப் போலீசாரோ, அரசோ முதலாளிகளுக்குச் சாதகமாக இருக்காது. அப்படிச் சாதகமாக நடந்ததாகச் சொன்னால் விசாரணை நடத்த அரசாங்கம் தயார்!

ஆனால், 'போலீசார் சென்றாலே, முதலாளிகளுக்குச் சாதகமாகச் செல்கிறார்கள்' என்று கூறுவது சரியல்ல! அதற்காகப் போலீசார் போகக்கூடாது என்று கூறுவதும் பொருத்தமானதல்ல!

நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள பஞ்சாலைத் தொழிலாளருக்கு எல்லாவகையிலும் அரசு உதவி செய்யும்."

நம் நாடு

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

திருவள்ளுவராண்டு 1998 ஆனி 28 (12—7—67) புதன்

குற்றவாளிகளைக் காட்டத் தயங்கலாமா?

"மன நிம்மதி இழந்த மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியில் அரசியல் குறுக்கிடும்படி செய்யக்கூடாது. அவ்வாறு அரசியல் குறுக்கிடுவதை நான் ஆதரிப்பவன் அல்லன். சமூக விரோதிகளின் காலித்தனமான கலவரச் செயலைத் தடுத்து நிறுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். 'யாரோ அடிபட்டார்' என நினைக்கக்கூடாது. யாரும் யாரையும், 'யாரோ' என நினைக்கக்கூடாது. எல்லோரும் ஒன்ருகச் செயல்பட வேண்டும். அரசியல் கருத்து வேறுபாட்டினுல் சமூக விரோதிகள் பயன் அடையும்படி விட்டுவிடக்கூடாது.

"மக்கள் மனத்தில் பீதி உள்ளது. யாரைப் பார்த்தாலும் ஐயம்—அச்சம் எழுகிறது. அப்படி இனிமேல் பீதிக்கு இடம் தரவேண்டாம். தக்க தடுப்பு—பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த விபத்துக்களுக்குச் சதித் திட்டம் காரணமானுல் அதைக் கண்டுபிடிக்கவும், தடுக்கவும், குற்றவாளிகளைத் தண்டிக்கவும் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசாங்கம் சுறுசுறுப்பாகச் செயலாற்றி வருகிறது. மக்கள் மனநிம்மதியுடன் வாழலாம்."

சென்னை நகரத்தின் பல்வேறு பகுதிகளில், கடந்த ஒரு கிழமைக்கு மேலாகத் தொடர்ந்தாற்போல் நடைபெற்றுவருகின்ற தீ விபத்துக்கள் குறித்து, அரசாங்கச் சார்பில் முதலமைச்சர் அண்ணு அவர்கள் வெளியிட்டிருக்கின்ற விரிவான அறிக்கையில், மேலே எடுத்துக்காட்டியிருக்கின்ற பகுதிகள் இடம் பெற்றிருக்கின்றன.

இனி தீ விபத்துக்கள் நேரவிடாமல் தடுக்கவும், தீ விபத்துக்களைத் தொடர்ந்து நிகழ்ந்திருக்கின்ற சிறு சிறு கலவரங்களைத் தடுத்து நிறுத்தவும் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கின்ற தீவிரமான நடவடிக்கைகளை விளக்கிக் கூறியிருக்கின்ற முதலமைச்சர் அவர்கள், தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்டுக் குடியிருப்புக்களையும் உடைமைகளையும் இழந்துவிட்டு, தங்கள் எதிர்காலத்தை எண்ணி எண்ணிக் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கின்ற மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பதில், 'அரசியல் வேற்றுமை' குறுக்கிடக்கூடாது என்றும், அத்தகைய அரசியல் குறுக்கீடுகளைத் தாம் ஆதரிப்பவர் அல்லர் என்பதையும் திட்டவட்டமாக அறிவித்திருக்கின்ருர்.

இதே நேரத்தில், அரசியல் கருத்து வேற்றுமைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, அல்லலுக்கு ஆளான மக்களுக்கு மறுவாழ்வு தேடித் தருவதில் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும்படியும் முதலமைச்சர் அண்ணு அவர்கள், தம் இயல்புக்கேற்ப உருக்கமாக வேண்டிக் கொண்டிருக்கின்ருர். அண்ணுவின் நல்லிதயத்தை, இதன் வாயிலாகத் தமிழ் மக்கள் நன்கு புரிந்துகொள்ளுவர் என்பதில் ஐயமில்லை.

சென்ற ஒரு கிழமையாக சென்னை நகரத்தில் ஏற்பட்டுவருகின்ற தீ விபத்துக்கள், இதற்கு முன்னர் ஏற்பட்ட தீ விபத்துக்களைப் போன்றதல்ல; முன்னைய தீ விபத்துக்களிலிருந்து இத் தீ விபத்துக்கள், முழுவதும் மாறுபட்டிருப்பனவாகும்.

இம்மாறுபாடு குறித்து ஏற்கனவே விளக்கமான செய்திகள் தரப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட குடிசைப் பகுதியில் தீப்பற்றிக் கொண்டது—தீயணைக்கும் படையினர் தீயை அணைத்துவிட்டனர்—சில குடிசைகளே எரிந்து சாம்பலாயின—குடிசை இழந்தவர்களுக்கு மாநகராட்சிப் பள்ளிகளில் தங்குவதற்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது—இலவச உணவு வழங்கப்பட்டு வருகிறது—மீண்டும் குடிசைகளைக் கட்டிக்கொள்ள அரசாங்கம் பண உதவி அளித்துவருகிறது—என்ற அளவுடன்தான், தீ நாசம் பற்றிய செய்திகள் முற்றுப்பெற்றுவிடும். தீயினுல் ஏற்பட்ட நாசம் எத்தகையதாக இருந்திட்டாலும், இதற்கு மேல் தீ விபத்துக்கள் பற்றிய விவரங்கள் தொடர் கதையாவதில்லை—சிறு கதைகளாகவே முற்றுப்பெற்றுவிடும். இதுதான், இதற்கு முன்னர் நடைபெற்றிருக்கின்ற அனைத்துத் தீ நிகழ்ச்சிகள் பற்றிய வாலாருகும்.

ஆனுல் இப்பொழுதோ, குடிசைகள் தீப்பிடித்து எரிந்திருப்பதிலேயே மாறுதல் இருக்கிறது. அடுப்புத் தீயின் விளைவாகக் குடிசைகள் எரிந்தது என்பது போய், குடிசையின் கூரைப் பகுதி முதன்முதலாகத் தீக்கு இரையாகும் அற்புதம் நிகழ்ந்துள்ளன. இப்புதுமுறை எரிப்பும், தொடர்ந்தாற்போல் பல்வேறு பகுதிகளிலும் ஏழை மக்களின் குடிசைகள் எரிந்து சாம்பலாகி இருப்பதையும், தீயணைப்புப் படையையும் காவல் துறையையும் தொலைபேசி மூலம் காரணமின்றி அழைப்பதையும் அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்ற எவரும், 'இப்புதுமையான தீ நிகழ்ச்சிகளுக்கு மறைமுகமான சதி ஏதாவது இருந்திடக்கூடுமோ' என்ற ஐயம், சராசரி அறிவு படைத்தவர்களுக்கும் ஏற்படத்தான் ஏற்படும். இந்த முறையில், 'இப்புதுமையான தீ நிகழ்ச்சிகளுக்கு ஏதாவது சதிச் செயல் இருந்திடக்கூடுமோ' என்ற ஐயம், அரசாங்கத்துக்கும் ஏற்பட்டு இருக்கிறது. இதன் விளைவாக, முழு உண்மையைக் கண்டறியும் பொறுப்பை, அதற்கெனத் திறமைமிக்க அதிகாரி ஒருவரைக் கொண்ட துப்பறியும் துறையிடம் தமிழக அரசாங்கம் ஒப்படைத்திருக்கிறது. அந்த அலுவலரின் அறிக்கையைப் பொதுமக்கள்—அரசாங்கத்தைப் போன்றே—ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்தச் சூழ்நிலையில், முன்னுள் முதலமைச்சரான பக்தவத்சலனுர் அவர்கள், சென்னை நகரத்தில் பேசிய காங்கிரசுக் கூட்டம் ஒன்றில், 'தீ வைப்புச் சம்பவங்களுக்குக் காரணமாக உள்ள குற்றவாளிகளைக் காட்டத் தம் வசம் போதுமான ஆதாரங்களிருப்பதாக' அறிவித்திருக்கின்ருர். இப்படி, ஏதோ 'தம் வசம் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன' என்று பொதுவாகக் கூறுகின்ற அளவுடன்தான், முன்னுள் முதலமைச்சர் இருந்துவிட்டிருக்கின்ருர்.

இத்தொடர்பில், அந்த ஆதாரங்களை, தாம் ஏன் இத்தருணத்தில் வெளியிட விரும்பவில்லை என்பதற்குரிய காரணத்தை அவர் குறிப்பிட்டிருக்கின்ருர்; அதாவது, 'இச்சம்பவங்களுக்கான காரணங்களைக் குறித்துத் தற்போது போலீசார் புலன் விசாரணை நடத்திக்கொண்டிருப்பதால் தாம் அவற்றை வெளியிடப்போவதில்லை' என்பதுதான், அவர் காட்டியிருக்கின்ற காரணம்.

தீ வைப்புச் சம்பவங்களைக் கண்டறிந்து கூற அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரியின் அறிக்கை வருகின்றவரையில், தம் வசமுள்ள ஆதாரங்களை வெளியிடக் கூடாது என்ற முன்னுள் முதலமைச்சரின் வாதத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. தம்மிடத்திலிருப்பதாகச் சொல்லும் ஆதாரங்களில், முன்னுள் முதலமைச்சருக்கே நம்பிக்கை இல்லையோ என்னவோ! அவற்றில் நம்பிக்கை இருப்பதாக இருந்தால், அவர் என்ன செய்திருக்கவேண்டும்? தம்மிடம் 'ஆதாரங்கள் உள்ளன' என்று—தாம் பேசிய அதே கூட்டத்தில்—தீ வைப்புக் குற்றவாளிகளின் பட்டியலைக் கூற விரும்பவில்லையானுலும்—உண்மையைக் கண்டறிய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கின்ற தனி அதிகாரியிடமாவது எழுத்து மூலம் அறிவிக்கத் துணிந்திருக்க வேண்டும். அவ்வாறு செயல்படுவதுதான் முறை—நியாயம்.

ஏதோ 'புதிர்' போடுவதுபோல், முன்னுள் முதலமைச்சர், **'தீ வைப்புச் சம்பவங்களுக்குக் காரணமாக உள்ள குற்றவாளிகளைக் காட்டத் தம் வசம் போதுமான ஆதாரங்கள் இருப்பதாகக் கூறியிருப்பது விந்தையாக இருக்கிறது.**

பக்தவத்சல முதலியார் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், இப்படி, 'நம்பகமான தகவல்கள் என் வசம் உள்ளன' எனப் பலமுறை கூறிவந்திருப்பது, இதற்குள்ளாகத் தமிழக மக்களின் நினைவிலிருந்து மறைந்துவிடவில்லை. அப்பொழுதாவது, 'பொதுஜன நன்மையைக் கருதி வெளியிட முடியாது' எனக் கூறிவிடுவதற்கு, அப்பொழுது அவரால் முடிந்தது. இப்பொழுது அவ்வாறு கூறக்கூடிய நிலையில், பக்தவத்சலனுர் அவர்கள் இல்லை. தாம் இன்று வைக்கப்பட்டிருக்கின்ற நிலையை மீண்டும் ஒருமுறை சிந்தித்துப் பார்த்து, துப்பறியும் தனி அதிகாரியிடம், 'குற்றவாளிகளைக் காட்ட' முன்னுள் முதலமைச்சர் முன்வரவேண்டும்.

தமக்குத் தெரிந்திருக்கின்ற குற்றவாளிகளைக் கூறிவிட்டால்' அவர்கள் தண்டிக்கப்படுவார்களோ, மாட்டார்களோ என்ற ஐயம்' முன்னுள் முதலமைச்சருக்கு இருந்திடத் தேவையில்லை. உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில், இன்றைய அரசுக்கு மிகுதியான அக்கறை உள்ளது. இது பற்றிய அரசின் முடிவு என்ன என்பதை, முதலமைச்சர் அண்ணு அவர்கள், தாம் வெளியிட்டிருக்கின்ற அறிக்கையில் தெளிவாகத் தெரிவித்திருக்கின்ருர்கள். அதைக் கண்ட பின்னராவது, தயக்கம் காட்டாமல், தாம் அறிந்திருக்கின்ற தீ வைப்புக் குற்றவாளிகளின் பட்டியலை முன்னுள் முதலமைச்சர் பக்தவத்சலனுர் அவர்கள் வெளியிடுவார் என நம்புகிறேம்.

> **"சதி கண்டுபிடிக்கப்பட்டால், அது உறுதியாக முறியடிக்கப்படும். சதியில் ஈடுபட்டோர் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்."**

—கா. க.

பொறியியல் துறையில் 'டிப்ளமோ' பட்டம்

இரு கல்லூரிகளில் முன்னேடித் திட்டம்

சென்னை, ஜுலை 10—

"பொறியியல் துறையில் பகுதி நேரப் பட்டப் படிப்புக்கு இந்த மாநிலத்தில் எங்கும் வசதி செய்யப்படவில்லை; மற்ற மாநிலங்களில் உள்ளதைப்போலபொறியியல் துறையில் டிப்ளமோ பட்டம் அளிப்பதற்கான முன்னேடித் திட்டம் இரண்டு கல்லூரிகளில்—சென்னை, கோவை பொறியியற் கல்லூரிகளில் பல்கலைக் கழகத்தின் அனுமதிக்காகக் காத்திருக்கிறது; அனுமதி கிடைத்து இவ்வாண்டே துவக்கப்படலாம்"

என்று கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில் திரு. நல்லசிவத்தின் கேள்விக்குப் பதிலளித்தார்.

மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்கும் மசோதா

சென்னை, ஜுலை 10—

1976-ம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாப்பு அளித்தல்) மசோதாவை உணவு அமைச்சர் கே.ஏ. மதியழகன் அறிமுகப்படுத்தினுர்.

ஏற்கனவே உள்ள சட்டத்தை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீடிப்பதே இந்த மசோதாவின் நோக்கம்.

நிலச் சீர்திருத்தங்கள் மீது விரிவான மசோதா கொண்டுவர அரசுக்கு அவகாசம் தேவையாயிருப்பதால், இந்த மசோதா கொண்டுவரப்பட்டது.

'அநீதியையேஇழைத்துவந்தவர்கள் புகலிடம் தேடிக்கொண்டனர்'

கேரளத் தொழிலமைச்சர் குற்றச்சாட்டு

ஆலப்புழை, ஜுலை 10—

"ரூ. 33 கோடி செலவில் பிர்லா நிறுவனத்தார் கேரளத்தில் அமைக்கவிருந்த தொழிற்சாலை ஒன்றுக்கு மத்திய அரசு அனுமதி வழங்காதது, டெல்லி கேரளத்திற்குச் செய்யும் ஓரவஞ்சனையின் ஒரு பகுதியே ஆகும்"

என்று கேரள தொழிலமைச்சர் டி. வி. தாமஸ் குற்றஞ்சாட்டினுர்.

இதுபற்றி பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் அவர் மேலும் கூறியதாவது:—

"ஏகபோக முதலாளித்துவம் வளருவதைத் தடுப்பது சம்பந்தமாக ஆராய அமைக்கப்பட்ட ஹசாரி குழுவின் பரிந்துரையையொட்டி மத்திய அரசு பிர்லாவுக்கு அனுமதி வழங்கவில்லை என்று கூறப்பட்டது.

"நாங்களும் ஏகபோக முதலாளித்துவத்திற்கு எதிரானவர்கள் தாம். அதனுல்தான் கேரள முதலமைச்சர், ஹசாரி அறிக்கைக்கேற்ப மத்திய அரசு பிர்லாவுக்கு அனுமதி மறுத்தால் அந்த அனுமதிக்காகத் தாம் வற்புறுத்தப் போவதில்லை என்று கூறிய்ருக்கிருர்.

உண்மையில் பிர்லாவுக்கு அனுமதி மறுத்ததற்கு ஹசாரி அறிக்கை வெளியாவதற்கு முன்னரே, 'கேரளத் தொழிற்சாலைக்கு அனுமதி அளிப்பது' என்று அனுமதி அளிக்கும் குழு முடிவு செய்திருந்தது.

"அநீதியையே கேரளத்திற்கு இழைத்துவந்த மத்திய அரசுக்கு ஹசாரி அறிக்கை ஒரு புகலிடமாக அமைந்துவிட்டது."

6 ஆண்டுகளில் 1,409 பேருக்கேபயிற்சி

இந்தியைத் தீவிரப்படுத்த இன்னெரு முயற்சி

ஆக்ரா, ஜுலை 11—

கடந்த 6-ஆண்டுகளில் ஆக்ராவிலுள்ள மத்திய இந்திக் கழகம், இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த 1409 ஆசிரியர்களுக்கு மட்டுமே பயிற்சி அளிக்க முடிந்திருக்கிறது!

இப்போது, இந்தி பேசப்படாத மாநிலங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தைத் தீவிரப்படுத்தியுள்ளது.

அக்கழகம், மூன்று படிப்புகளுக்கான இடங்களின் எண்ணிக்கையை 125-லிருந்து 170-ஆக உயர்த்தியுள்ளது; இது, அடுத்த ஆண்டில் 230-ஆக அதிகரிக்கப்படலாம்.

உபகாரச் சம்பளம் வழங்குவதற்கான தொகையை 14,500 ஆக உயர்த்த அக்கழகம் முடிவு செய்துள்ளது. அடுத்த ஆண்டில் இது 18,700 ஆக உயரும்.

மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளின் எதிர்காலம்

சென்னை, ஜுலை 10—

மாவட்ட உயர்நிலைப் பள்ளிகளின் எதிர்காலம் குறித்து, கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இன்று சட்டமன்றக் கேள்விகட்குப் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

"மாவட்டக் கழகப் பள்ளிகளை 1—4—66 முதல் அரசினர் எடுத்துக்கொண்டு ஆணை பிறப்பித்தனர். அந்தப் பள்ளிகளை நிர்வகிப்பதற்கென்று தனிக் கல்வி அதிகாரிகள் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

"ஏற்கனவேயுள்ள அரசினர் பள்ளிகளுக்கும்—இந்தப் பள்ளிகளுக்குமிடையே நிர்வாக முறையிலும், ஊதிய விதிமுறைகளிலேயும் வேறுபாடுகள் இருக்கின்றன; இந்த வேறுபாடுகளைப் போக்கி ஒன்றுபடுத்தும் முயற்சி நடைபெற்றுவருகிறது.

"இந்த இரண்டுவகைப் பள்ளிகளுக்குமிடையேயுள்ள குழப்பம் நீக்கப்பட்டதும், அவைகள், 'அரசினர் பள்ளிகள்' என்ற பெயரைப் பெறும்.

"தனியார் பள்ளிகளை அரசே எடுத்துக்கொள்ளும் எண்ணம் இல்லை."

மதுவிலக்கைத் தளர்த்துகிறது ஒரிசா அரசு!

கட்டாக், ஜுலை 11—

ஒரிசா அரசு, நாட்டு விடுதலைக்குப் பிறகு புதிதாக இம்மாநிலத்தில் 43 மதுக் கடைகளுக்கு லைசென்சு வழங்கி முதன்முதலாக மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்தியது. இம்மாறுதலினுல் அரசுக்கு ரூ. 20 இலட்சம் வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டம் 1948-ம் ஆண்டு முதன்முதலாகக் கொண்டுவரப்பட்டது. அதையடுத்து ஆண்டுகளில் கட்டம் கட்டமாக மாநிலத்தில் பாதிப் பகுதியில் மதுவிலக்கு வந்துவிட்டது. இதனுல் அரசிற்கு ஆண்டுதோறும் ரூ. 70 இலட்சம் வருவாய் கிடைக்காமல் போய்விட்டது.

பரம்பிக்குளம்---ஆளியாறு திட்டம்

‘கேரளத்தின் நிபந்தனை சிக்கல் நிறைந்தது’---அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

சென்னை, ஜூலை 10—

“பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டங்களில், நமக்கும்—கேரளத்திற்கும் பெரிய தகராறு ஒன்றுமில்லை; 11,800 கன அடி நீர் பெறுவதற்காக, நீராற்றில் ஒரு பெரிய அணை கட்ட நாம் முன்வந்தபோது, அதற்குக் கேரள அரசு ஓர் நிபந்தனை விதித்தது; ‘ஆனைமலை ஆற்று நீர் முழுவதையும் கேரளத்திற்கு விட்டுவிடவேண்டும்; தமிழகம் கொஞ்சம்கூட எடுத்துக்கொள்ளக்கூடாது’ என்பதே அந்த நிபந்தனை. இதிலேதான், பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ளவேண்டிய சிக்கல் இருக்கிறது; எந்தச் சிக்கலையும் தீர்த்துவைக்கக் கூடிய முதலமைச்சர் அண்ணா அவர்கள், கேரளத்துடன் கலந்து பேசி இந்தச் சிக்கலையும் தீர்த்துவைப்பார் என்று நம்பலாம்”

என்று, பொதுப்பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள்’ சட்டமன்றத்தில், நீர்ப்பாசன—பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். அவர் மேலும் பல பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட்டதாவது:—

“தென்னாற்காடு, தஞ்சை மாவட்டங்களில் விவசாய-நீர்ப்பாசன மாநாடுகள் நடைபெற்றன; விரைவில் கோவையிலும் நீர்ப்பாசன மாநாடு நடக்கும்.

கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் நில—நீர் ஆராய்ச்சி விரைவில் நடைபெறும்.

கங்கை-காவிரி இணைப்பு

“கங்கையைக் காவிரியுடன் இணைப்பது பற்றி சர். சி. பி. இராமசாமி (ஐயர்) சொன்ன திட்டம் பற்றி ஏதாவது ‘பைல்’களில் குறிப்புகள் இருக்கிறதா என்று தேடிப் பார்த்தேன்; ஒன்றும் கிடைக்கவில்லை. அவர் 15 ஆண்டுகளுக்கு முன்பு அதைச் சொன்னார். இதுவரை ஏதாவது செயல்முறை அகப்படுகிறதா என்று தேடிப் பார்த்தாலும் ஒரு குறிப்பும் கிடைக்கவில்லை.

ஆயினும், கங்கையை தமிழ்நாட்டின் எல்லைவரை மத்திய அரசு கொண்டுவந்து விட்டுவிட்டால், அதைத் தமிழ்நாட்டுக்குள் கொண்டுவந்து காவிரியுடன் இணைக்கும் பணியை நிச்சயம் இந்த அரசு செய்யும் என்று உறுதி கூறுகிறேன்.”

நில-நீர் இணைப்புத் திட்டம்

‘நில—நீர் ஆய்வுத் துறையை இணைக்கவேண்டும்’ என்று வற்புறுத்தப்பட்டது பற்றி அவர் குறிப்பிட்டதாவது:—

“இந்தத் துறையின் வேலைகள் 1965-லேயே ஆரம்பிக்கப்பட்டு வேலை முடியவில்லை என்று குறை தெரிவிக்கப்பட்டது. புதிய அரசு இந்த வேலைகளைத் துரிதப்படுத்தும் என்று உறுதி கூறுகிறேன்.

இப்பணி, ஐக்கிய நாடுகள் சபையின் திட்டம்; ஆகையால், இந்த இரண்டு துறைகளின் (நில—நீர்) இணைப்பைத் தற்போது இணைக்க முடியாது; அது, தனித்துத்தான் செயல்பட வேண்டியிருக்கிறது.

மதுராந்தகம் தாலுகாவில்!

கடந்த புயலினால் மதுராந்தகம் தாலுகாவில் மிகவும் பாதிக்கப்பட்ட ஏரிகள், குளங்கள் ஆகியவற்றை மராமத்து செய்யும் வேலை நடைபெற்று கொண்டு வருகின்றன. புதிய ஆண்டில் வேலை மேற்கொண்டும் துரிதப் படுத்தப்படும்.

கிழக்குக் கடற்கரையோர நெடுஞ்சாலைத் திட்டம்

சென்னையை—கன்னியாகுமரியுடன் இணைக்கும் கிழக்குக் கடற்கரையோர நெடுஞ்சாலைத் திட்டம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறவேண்டிய பணி. இந்த நெடுஞ்சாலைப் பணிக்கு ரூ. 14 கோடி செலவாகும்.

இந்த நெடுஞ்சாலை அமைக்கப்பட்டால், இது, சிறிய துறைமுகங்களான புதுவை—கடலூர்—நாகப்பட்டினம் — தூத்துக்குடி ஆகியவைகளுடன் இணையும். இதனால் பலவிதப் போக்குவரத்துக்கள் நடைபெற்று ஆண்டொன்றுக்கு ரூ. 4,51,00,000 அரசாங்கத்திற்கு வருவாய் கொண்டுவரக்கூடியது. ஆகவே, இந்த நெடுஞ்சாலைத் திட்டத்தைக் கட்டாயம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள அரசாங்கம் தவருது.

வைகை நதியைச் சீர்படுத்தும் திட்டம்

வைகை நதி படுகையில் சுமார் 100 சிறு சிறு கால்வாய்கள் பிரிந்து செல்கின்றன; மேற்படி கால்வாய்களின்மூலம் 414 ஏரிகளில் தண்ணீர் பாய்கின்றன; ஆனால், இந்தப் பாசன வசதியை நம்பி இருக்கமுடியாத நிச்சயமற்ற தன்மை உள்ளது.

வைகை நதி கால்வாய்களைப் பயனுள்ளதாக ஆக்கும்வகையில் நவீன முறையில் சீர்படுத்தும் திட்டம் ஒன்று இருக்கிறது; இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று புதிய அரசாங்கம், மத்திய அரசுக்குப் பல முறை வற்புறுத்தி எழுதி எழுதி நேற்றுதான் அதற்கான அனுமதி இந்த அரசுக்குக் கிடைத்திருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் தற்போது நிச்சயமற்ற தன்மையில் உள்ள 1,32,000 ஏக்கர் நிலங்களுக்கு ஆண்டு முழுவதும் நீர்ப்பாசனம் உறுதி செய்யப்படும்.

அதுபோது, மேற்கொண்டு 13,900 ஏக்கர் புதிய நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும்.

பொதுப் பணித்துறை ஊழியர்கள் நிலைமை

பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை ஊழியர்களின் வேலை நிலைமை குறித்தும், அவர்களது கோரிக்கைகள் குறித்தும் ஆராய்ந்து—என்னென்ன வகையில் அந்தத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கலாம் என்பதை ஆராய்ந்து—அறிக்கை தயாரித்துக் கொடுக்கும்படி பொதுப் பணி பொறியாளரைக் கேட்டுக் கொண்டிருந்தோம். அந்த அறிக்கை முடியும் தருவாயில் உள்ளது; அவருடைய அறிக்கை கிடைத்த பிறகு அதனைப் பரிசீலித்து, மேற்படி துறைகளில் உள்ள ஊழியாகளின் வேலை நிலை உயரவும், தகுந்த நிவாரணம் அளிக்கவும் இந்த அரசு முடிவுஎடுக்கும்.

இந்த அரசு தொழிலாளர் அரசு; ஆகவே, அதுவரை அவசரப்படாமல்—பரபரப்பு அடையாமல் பொறுமையாக இருக்கும்படி ஊழியர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.”

‘எழுச்சி நாளி’ல் பங்கேற்பு

பி.சோ. கட்சி அறிவிப்பு

“தமிழகத்தின் வளமைக்கும், பொருளாதாரச் செழுமைக்கும் சேலம் இரும்பாலை—தூத்துக்குடி துறைமுகத் திட்டங்கள் இன்றியமையாதவைகளாகும்.

இந்த இரு திட்டங்களை நிறைவேற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பது தமிழக மக்களின் ஒரு தமிழ் உணர்வாகும்.

“பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி, இதற்கெனத் தனி மாநாடே கூட்டி இக்கோரிக்கையை வலியுறுத்தியுள்ளது.

“இந்தக் கோரிக்கையை வலியுறுத்தத் தலைமையமைச்சரின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியதன் மூலம் ஏராளமான சோஷலிஸ்டுகள் சிறைப்பட்டுள்ளனர்.

“23—7—67-ல் இந்தக் கோரிக்கைக்காகத் தி. மு. கழகம், ‘எழுச்சி நாள்’ கொண்டாடுவதை மகிழ்ச்சிடன் வரவேற்கிறது; தமிழகத்தில் உள்ள எல்லா சோஷலிஸ்டுகளும் இதில் முழு அளவில் பங்கு கொண்டு, ‘எழுச்சி நாளை’ச் சிறப்புடன் கொண்டாட உதவுமாறு வேண்டுகிறேன்”

என்று, தமிழக பிரசா சோஷலிஸ்டுக் கட்சி செயலாளர் திரு. ஜி. ஏ. வடிவேலு அறிவிக்கிருர்.

முஸ்லிம் லீக்

சென்னை, ஜூலை 8—

திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தவிருக்கும் ‘எழுச்சி நாளி’ல் முஸ்லிம் லீக் கட்சியினரும் பங்கு கொள்ளுமாறு டில்லியிலிருந்தவாறு முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில்அவர்கள் வேண்டுகோள் விடுத்திருப்பதாக, சென்னையில் உள்ள முஸ்லிம் லீக் தலைமை நிலையத்திலிருந்து அறிவிக்கப் படுகிறது.

கழகப் பாடகர் தாக்கப்பட்டார்

தாக்கியவருக்கு காங்கிரசார் ஆதரவு

இராசபாளையம் 18-வது வார்டு செவக்காட்டுத் தெருவில், கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவரும் இளங்கோ கலைக் குழு பாடகருமான நாராயணன் என்பவர், தனது வேலையை முடித்து வீடு திரும்பும்போது இராசபாளையம் காங்கிரசுப் பிரமுகர் டி. ஆர். மாடசாமியின் உறவினரான ‘கருவண்டு’ என்ற பழனிச்சாமி வேண்டுமென்றே வழிமறித்து வம்புச் சண்டைக்கு இழுத்து, தனது பெல்ட்டால் அடித்ததோடு, இடது கையில் தனது பல் பதியும் அளவுக்குக் கடித்துமிருக்கிருர்.

இது குறித்துப் போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் நடவடிக்கை எடுத்திருக்கிருர்கள்.

அந்த நபரை, காங்கிரசுக்காரர்கள், பொறுப்பில் வெளியில் கொண்டுவந்துள்ளனர்.

இந்தியில் வாங்கும் மதிப்பு எண்!

சென்னை, ஜூலை 11—

மாணவர்கள் இந்தியில் பெறும் மதிப்பு எண்கள், மொத்தத்தில் தேர்வு முடிவை நிர்ணயிக்கப் பயன்படுமே தவிர, இந்தியில் தேர்வை நிர்ணயிக்கப் பயன்படா என்றும், இந்தியில் 60 சதவிகிதத்திற்கு மேல் மதிப்பு எண்கள் பெற்றதால் கல்லூரியில் மாதத்திற்கு ரூ. 50-ஆக உதவி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 105 என்றும் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில், வி. கே. கோதண்டராமன் கேள்விக்குப் பதிலளித்தார்.

பள்ளித் தேர்வு முறையை மாற்றியமைக்க வேண்டும்

‘தாங்கக்கூடியவர்கள்மீது ‘கல்வி செஸ்’ விதிக்கலாம்’--எஸ். இராமச்சந்திரன் கருத்துரை

“நமது கல்வி நிலையங்களில் தற்போதுள்ள பரீட்சை முறையையே மாற்றியமைக்க வேண்டும்” என்று, கழக உறுப்பினர் திரு. எஸ். இராமச்சந்திரன் சட்டமன்றத்தில் கருத்தறிவித்தார்.

கல்வித்துறை மான்யத்தின்மீது நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு அவர் ஆற்றிய உரை வருமாறு:—

“திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்திருக்கின்ற கல்வி மானியத்தில், ஏற்கனவே இருந்ததைவிட அதிகமாக ரூ. 10 கோடி செலவழிக்க முன்வந்திருப்பது, கல்வியின்பால் எந்த அளவுக்கு அக்கறையும், கவனமும் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதனைக் காட்டுகிறது.

மேலும், ஒரு நாளைக்கு நாம் பள்ளிகள் மூலமாக ரூ. 25 இலட்சம் செலவழிக்கிறோம் என்று எண்ணுகிறபொழுது, ஒரு பெருமையையும் அது நமக்குத் தருகிறது.

பள்ளிக்கூடம் என்று கேட்டு—பள்ளிக்கூடத்திற்கு மட்டும் அனுமதி தந்துவிட்டு — பள்ளிக்கூடத்திற்குக் கட்டிடமும, அதை நடத்துவதற்கு ஆசிரியர்களும், பாடங்களைச் சொல்லித் தருவதற்கு விஞ்ஞானக் கருவிகளும் இல்லாமல் எத்தனையோ பள்ளிகள் இருக்கின்றன என்பதை நாம் அறிவோம்.

அங்கெல்லாம் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்திவிட்டார்கள் என்ற காரணத்தினால், மாணவர்கள் தொடர்ந்து கல்வியை நல்ல முறையிலே பெறவேண்டும்’ என்று கருதி—அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு நல்ல ஆசிரியர்களை நியமிப்பதற்கும், நல்ல விஞ்ஞானக் கூடங்களை அமைப்பதற்குமாக சீரான பணியை மேற்கொள்வதற்காக அதிகமான தொகையை ஒதுக்கியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

கல்வித் துறையை எடுத்துக் கொண்டால், நம்முடைய மாநில வரவு-செலவுத் திட்டத்தில் மிகப் பெரும்பாலான பங்கை கல்விக்காக நாம் செலவழிக்கிறோம் என்பது பெருமைக்குரியது.

இந்தத் தொகையை இன்னும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே போவதற்கு ஒரு நல்ல வருவாய்த் துறையைப்பற்றி நாம் கருதவேண்டியிருக்கிறது.

நம் நாட்டினுடைய வரவு-செலவுத் திட்டத்தில் கிட்டத்தட்ட நான்கில் ஒரு பங்கை கல்விக்காக செலவழித்து வருகிறோம். இந்நிலைமை வளர்ந்தால், அபிவிருத்தித் திட்டங்களுக்கான முயற்சிகளில் ஈடுபடுவது வருங்காலத்தில் கடினமாக இருக்கும்.

மேலும், நாம் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களால் நாளுக்கு நாள், வருமான வரி செலுத்துவோர் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டே வருகிறது. இத்தகைய வசதி படைத்தோர் செலுத்தும் வருமான வரியின்மீது குறிப்பிட்ட ஒரு‘செஸ்’தொகையை கல்விக்காக வசூலிக்க அரசு முன்வரவேண்டும்.

கல்வி ‘செஸ்’ மூலம் வரும் வருவாயைக் கொண்டு, கல்வித் துறையில் நல்ல முன்னேற்றத்தை மேற்கொள்ளலாம்.

மேல்நாடுகளில்கூட, பணக்காரர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் இத்தகைய கல்வி ‘செஸ்’ விதித்து, கல்வித்துறையை விரிவுபடுத்துகிருர்கள்.

வருமான் வரி செலுத்துபவர்கள் அதிகரிக்க அதிகரிக்க—அந்தத் தொகையும் அதிகரிக்க அதிகரிக்க— கல்வி வசதியை நாள்தோறும் பெருக்குகின்ற ஒரு நல்ல சீரான வளர்ச்சியையும் நாம் மேற்கொள்ளலாம்.

கல்விக்காக நாம் செலவழிக்கின்ற தொகையைக் கணக்கிடுகிறபொழுது—மற்ற அபிவிருத்தித் திட்டங்களுக்கும் நாம் செலவழிக்க வேண்டியதை உணருகிறபொழுது, தாங்கக்கூடியவர்கள் மீது ‘கல்வி செஸ்’ விதித்து, கல்வியை எல்லோருக்கும் இலவசமாக்குவது எந்தவிதத்திலும் தவருகாது என்தைதக் கருத்தில் கொள்ளவேண்டும்.

மேலும், தேர்வு முறையிலே மாணவர்களுடைய ஊக்கத்தையும், திறமையையும் உடன் கொண்டு ஆராய்ந்து, எந்தத் துறையில் அவர்களுக்கு ஊக்கம் இருக்கிறது—எந்தத் துறையில் அவர்களுடைய நாட்டம் செல்கின்றது—எந்தத் துறையில் அவர்களுடைய அறிவை வளர்க்க முடியும் என்பதையும் கருத்தில் கொண்டு, அவர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் அவ்வப்போது வாரந்தோறும் அல்லது மாதந்தோறும் நடைபெறுகின்ற தேர்வுகளின் மூலம் அவர்களுடைய திறமையையும் நிர்ணயிப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அந்த முறையில் நம்முடைய பரீட்சை முறையை மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பல இடங்களில் தெரிவித்துவருவது போற்றி வரவேற்கத்தக்க ஒன்ருகும். அதையும் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.”

‘பதவியிலிருந்து ஏன் நீக்கக்கூடாது?’

திருச்சி நகராட்சித் தலைவருக்கு நோட்டீசு

சென்னை, ஜூலை 10—

“1960 முதல் 1966 வரை எங்கெந்த நகராட்சித் தலைவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது? அதற்கான காரணம் யார் யார்?”

என்று சட்டமன்றத்தில், திரு. வி. கே. கோதண்டராமன் கேட்ட கேள்விக்கு உள்ளாட்சித் துறையமைச்சர் திரு. முத்துசாமி பதிலளிக்கையில் கூறியதாவது:—

“திருச்சி, நெல்லை நகராட்சித் தலைவர்களுக்கு, ‘ஏன் பதவியிலிருந்து நீக்கப்படக்கூடாது?’ என்று கேட்டு விளக்கம் அளிக்குமாறு அறிவிப்புக் கொடுக்கப்பட்டது.

“திருச்சி நகராட்சித் தலைவர் திரு. லூர்துசாமி பிள்ளை, அரசுக்கு அனுப்பிவைக்குமாறு கமிஷனர் கொடுத்த அறிக்கை ஒன்றை வேண்டுமென்றே அனுப்ப மறுத்துவிட்டதாலும், நிர்வாக அலுவல்களில் அவர் குறுக்கிட்டதாலும், அவரை, ‘ஏன் பதவியிலிருந்து நீக்கக்கூடாது?’ என்று 24—4—65-ல் அரசு காரணம் கேட்டது.

“நெல்லை நகராட்சித் தலைவர் திரு. அப்துல் மஜீது, தற்போதைய முதலமைச்சர் உருவப் படத்தை அரசு அனுமதிக்காகக் காத்திராமல் திறந்து வைத்ததற்காகவும், அரசு அனுமதியின்றி முஸ்லிம் லீக் தலைவர் முகம்மது இஸ்மாயில் படத்தைத் திறந்துவைத்ததாகவும், அதனால், ‘ஏன் பதவியிலிருந்து நீக்கக்கூடாது’ என்று அவரிடம் காரணம் கேட்கப்பட்டது.”

ஆலடி அருணா:—“திருச்சி நகராட்சித் தலைவரிடமிருந்து பதில் வந்ததா?”

அமைச்சர்:—“திருச்சி நகராட்சித் தலைவர், ஆணையர் ஆகிய இருவரிடமிருந்தும் பதில்கள் எதிர்பார்க்கப்படுகின்றன; பதில்களை விரைவில் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும்.”

சமூக விரோதிகள்மீது தீவிர நடவடிக்கை

உணவுத் தானியம் பறிமுதலாகும்

அமைச்சர் கே. ஏ. மதியழகன் எச்சரிக்கை

சென்னை, ஜூலை 11—

"கொள்முதல் தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் நேரத்தில் பதுக்கல்காரர்கள்—கள்ளக்கடத்தல்காரர்கள்—சமூக விரோதிகள் ஆகியோரின் செயல்களைப் பற்றித் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவர்கள் துறையில் மிகுந்த கண்காணிப்பு செய்யப்படுகிறது. மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக அமையும் விதத்தில் இவர்களுக்குத் தண்டனைகள் தரப்பட வேண்டும் என்பதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

"இத்தகையவர்களின் சொத்துக்களையும் பறிமுதல் செய்யவேண்டும் என்று துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் கருத்து வெளியிட்டிருக்கிறார். அவருடைய கருத்துக்கு இந்த அரசு பலத்த ஆதரவு தெரிவித்திருக்கிறது. அவர்களுடைய எல்லாச் சொத்துக்களையும் பறிமுதல் செய்வதற்குத் தக்கவகையில் நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டு வருவதற்கு தமிழக அரசு ஆதரவு அளித்துள்ளது.

"இப்படிப்பட்ட சமூக விரோதிகள், மற்ற நாடுகளில் நாடு கடத்தப்படுகிறார்கள்; இன்னும் மரண தண்டனைகூட அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

"வர்த்தகச் சூதாடிகள், உணவுப் பொருள் கடத்தல்காரர்கள் ஆகியோருக்கு இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் 6-வது பிரிவின்கீழ் கடும் தண்டனை தரப்படவேண்டும் என்று மத்திய அரசிடமிருந்து உத்தரவு வந்திருக்கிறது. இந்த உத்தரவின்படி, இத்தகையவர்கள் வசம் உள்ள தானியங்கள் பறிமுதல் செய்யப்படும்"

என்று, உணவுத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், சட்டமன்றத்தில் அறிவித்தார்.

அரசாங்க வணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவுக்கு ரூ. 85,89,07,100-க்கான மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:—

"மூன்றரைக் கோடி மக்களுக்கு உணவு கொடுக்கும் பொறுப்பை ஏற்றுள்ளதால் தான், அரசு இப்போது கட்டுப்பாட்டைக் கொண்டு வந்திருக்கிறது. 'கட்டுப்பாடு இருக்கக் கூடாது' என்பதுதான் இந்த அரசின் கொள்கை; அதன்படி கட்டுப்பாட்டை எடுக்கத்தான் போகிறோம்; ஆனால் இப்போது அல்ல! உணவு உற்பத்தி பெருகிவிட்டால் எல்லாக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டு விடும்."

படி அரிசித் திட்ட விரிவு

ரூபாய்க்கு படி அரிசித் திட்டம் பற்றிக் குறிப்பிட்டு அமைச்சர் கூறியதாவது:—

"தாம்பரம், பறங்கிமலை, பூந்தமல்லி, திருவொற்றியூர் முதலிய பகுதிகளிலும் படி அரிசித் திட்டம் இன்னும் ஓரிரண்டு மாதங்களில் அமுலாக்கப்படும். அதன்பின், குடும்பக் கார்டுகள் உள்ள இடங்களிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்."

தரமான அரிசிக்கு ஏற்பாடு

"கோவையில் 'ரேஷன்' கடைகளில் தரமான அரிசி தரப்படுவதில்லை" என்று கூறப்பட்ட புகாரைக் குறிப்பிட்டு அமைச்சர் கூறியதாவது:—

"சென்னை நகரிலும், கோவையிலும் தரமான அரிசிதான் கொடுக்கப்படுகிறது. பழைய அரசு கிடங்குகளில் ஏதாவது தரமில்லாத அரிசி இருந்திருக்கலாம். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில், தரத்தை அதிகரிக்கத் தனியாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், 'செலவு ஆனாலும் பரவாயில்லை' என்று தனியாக அதிகாரிகளை நியமிக்கிறோம்."

"கொள்முதல் திட்டத்திற்கு எதிர்க் கட்சித் தலைவர் உட்பட எல்லோரும் ஒத்துழைப்புத் தர வேண்டும். அப்படி ஒத்துழைப்பைத் தந்தால், இத்திட்டத்தில் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற இடையூறுகளைக்கூடக் களைந்து விடலாம்.

'நெல்லுக்கு அதிக விலை கொடுக்கவேண்டும்' என்பதை விட, விவசாயிகளுக்குப் பயன்படும் கருவிகளையும், இரசாயன உரத்தின் விலையையும் குறைத்தால் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும்.

ஒப்புதல் தந்தால் விலைகளைக் கட்டுப்படுத்த முடியும்

'வேர்க்கடலை, பிண்ணாக்கு முதலியவற்றுக்கும், வெல்லத்திற்கும் கட்டுப்பாடு உத்தரவு பிறப்பிக்க ஒப்புதல் அளிக்கவேண்டும்' என்று மத்திய அரசினரைக் கேட்டிருக்கிறோம்; இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் இவைகளின் விலைகளைக் கட்டுப்படுத்த முடியும்."

சீர்கேடுகள் சீர்செய்தோம்!

மானியக் கோரிக்கையை அளித்துப் பேசுகையில் அமைச்சர் குறிப்பிட்டதாவது:—

"மாதவரம் பால் பண்ணை நிறுவனத்தில் பல சீர்கேடுகளைப் புதிய அரசாங்கம் அகற்றி இருக்கிறது; அதன் பயனாக முந்தைய ஆண்டுகளில் எப்போதும் இல்லாத வகையில் இந்த ஆண்டில் 30 ஆயிரம் லிட்டர் பால்—அதுவும் வெயில் காலத்தில் உற்பத்தியாகி இருக்கிறது.

குறைந்த விலையில் பால்

"காந்தியார் பிறந்த நாளான அக்டோபர் 2-ந்தேதியிலிருந்து மதுரை பால் பண்ணைத் திட்டத்தில், கர்ப்பிணிகளுக்கும், ஏழைகளுக்கும் மிகக் குறைந்த விலையில் பால் வழங்கப்படும்.

குறைந்த விலையில் உரம்

"போதுமான இரசாயன உரத்தைத் தாமதமன்னியில் காலாகாலத்தில் கிடைக்கச் செய்யவும், உரத்தின் விலையை மறுபடியும் சனவரிக்கு முந்தி என்ன விலை இருந்ததோ அதே விலையில் நிர்ணயிக்க வேண்டுமென்றும் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தும்."

வட சென்னையில்

எம்.ஜி.ஆர். நிதி திரட்டும் நிகழ்ச்சி

கழகத் தோழர்களுக்கு பகுதிச் செயலாளர் வேண்டுகோள்

சென்னை நகரில் தீ விபத்தால் வீடுகளையும் உடைமைகளையும் இழந்து அல்லற்படுகின்ற மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகப் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், வட சென்னை தியாகராயர் கல்லூரி எதிரிலிருந்து நிதி திரட்டும் நிகழ்ச்சியினை, 14-7-67 காலை 9 மணிக்கு துவக்குகின்றார்.

கழகச் செயலாளர்களும் நிர்வாகிகளும், பொதுமக்கள் அறியும் வண்ணம், எம்.ஜி.ஆர். செல்லும் சாலைகளை விளம்பரம் செய்வதுடன், நிகழ்ச்சிக்கு நல்லாதரவும் ஒத்துழைப்பும் நல்கும்படி பகுதிச் செயலாளர் ம. மோகனரங்கம் எம்.சி. கேட்டுக்கொள்கிறார்.

முதலமைச்சர் அண்ணா

நிகழ்ச்சிகள்

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், 13—7—67 பிற்பகல் சென்னையிலிருந்து புறப்பட்டு மாயூரம் செல்கிறார்; மாயூரத்திலிருந்து 14—7—67 காலை 8 மணிக்குப் புறப்பட்டு ஆடுதுறை அடைகிறார்; ஆடுதுறையிலிருந்து பிற்பகல் சென்னைக்குப் புறப்பாடு; 15—7—67 இரவு இரயில் மூலம் மீண்டும் புறப்பட்டு மறுநாள் மாயூரம் அடைவார்; அன்று காலை கும்பகோணம் சென்று அங்கிருந்து சேலத்திற்குப் புறப்படுவார்; சேலத்தில் எஸ்.வி.ஆர். கல்லூரி திறப்பு விழாவில் கலந்து கொண்டுவிட்டு அன்றிரவே சென்னைக்கு இரயிலில் புறப்படுவார்.

2,082 தடவை ஒப்பந்தம்மீறல்

புதுடில்லி, ஜூலை 10—

தாஷ்கண்ட் ஒப்பந்தம் ஏற்பட்ட நாளிலிருந்து 1949 கராச்சி போர் நிறுத்த ஒப்பந்தத்தை 2,082 தடவை பாகிஸ்தான் மீறியதை ஐ. நா. பார்வையாளரிடம் இந்தியா தெரிவித்துள்ளது.

Government of Madras

MADRAS DAIRY AND MILK PROJECT

AUCTION SALE NOTICE

The condemned Milk Van MSV 8092, 142" Wheel Base, Tata Mercedes Benz Vehicle Model L 312 36 will be sold in Public Auction in the premises of Regional Government Workshop, Thanjavur on 2—8—67 at 11.00 A.M. by the Deputy Registrar (Dairying) Tiruchirapalli. The terms and conditions of Sale are obtainable from the Office of the Commissioner for Milk Production and Livestock Development, Milk Colony, Madhavaram, Madras-51 and the Office of the Deputy Registrar (Dairying), 90, Vanarapettai, Tiruchirapalli on any working day during office hours. The vehicle will be available for inspection at the place of auction on all working days.

P. N. VEDANARAYANAN, I.A.S.
Commissioner for Milk Production and Livestock Development,
MADRAS-51

தலைநகரை முந்திய அரசு 'அன்றுடங்காய்ச்சி'யாக்கிய நிகழ்ச்சி உண்மை!

'அது பற்றி இப்போது நாங்கள் ஆராய விரும்பவில்லை'

'பொறுப்பேற்ற பின் தேவையான அரிசியைச் சேமித்து வைத்துவிட்டோம்'

சட்டமன்றத்தில் காங்கிரசார் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அளித்த பதில்

சென்னை, ஜூலை 11—

"1967—68-ல் சம்பா இளங்கார் ரகம், 5,50,000 டன்னும், குறுவை 2,50,000 டன்னும் கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் பயிர் விளைச்சலின் அடிப்படையிலேயே கொள்முதல் அளவு வரையறுக்கப்படுகிறது; சம்பா பருவத்தில் ஓர் ஏக்கரும் அதற்குக் குறைவாகவும் நிலம் உள்ளவர்களுக்கு விதி விலக்களிக்கப்பட்டது; 10 ஏக்கர் வரை நிலம் உள்ளவர்கள், 'ஒரு குறிப்பிட்ட அளவும், அதற்குமேல் நிலமுள்ளவர்கள் உபரி நெல் முழுவதையும் அரசு கொள்முதலுக்குக் கொடுக்கவேண்டும் என்று ஒரு 'ஸ்லாப்' முறையில் நிர்ணயிக்கப்பட்டது.

"ஏற்கனவே கொள்முதல் துவக்கப்பட்டுவிட்டதால் முழு அளவு அமுல்படுத்த முடியவில்லை என்றாலும் அடுத்த பருவத்தில் வெற்றிகரமாகக் கொள்முதல் செய்யப்படும். இதுவரை 5,32,450 டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது"

என்று, சட்டமன்றக் கேள்விநேரத்தில் உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் விளக்கமளித்தார்.

மேலும் பல துணைக் கேள்விகட்கு அவர் பதிலளித்ததாவது:—

"கொள்முதல் முடிந்துவிட்டதாலேயே நெல்—அரிசி நடமாட்டக் கட்டுப்பாட்டை எடுத்துவிட வேண்டும் என்பதில்லை; தரமான அரிசி கிடைக்கத் தனி அதிகாரிகள் முயற்சி செய்து வருகின்றனர்; ஓர் ஏக்கருக்குக் குறைந்த நிலமுள்ளவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டதன் மூலம் 13 இலட்சம் விவசாயிகள் அந்த விதிவிலக்கைப் பெற்றிருக்கிறார்கள்; இந்த விதிவிலக்கு வரம்பை 3 ஏக்கராக உயர்த்தினால், பிறகு கொள்முதல் செய்வதிலேயே பொருள் இருக்கமுடியாது. ஏனெனில், 3 ஏக்கருக்குக் குறைந்த நிலமுள்ளவர்கள்தான் இந்த மாநிலத்தில் 75 சதவிகிதத்தினர் இருக்கின்றனர். அந்த அளவுக்கு இங்கு நிலம் துண்டு துண்டுகளாகப் பிரிந்து கிடக்கிறது."

காங்கிரசு உறுப்பினர் கேள்வி:— "இந்த அரசு பதவி ஏற்ற அன்று 500 டன் அரிசிதான் இருப்பு இருந்தது என்று சொல்லப்படுவது உண்மையா?"

அமைச்சர் பதில்:—"இந்த அமைச்சரவைப் பதவியேற்றபோது சென்னை மாநகரின் இரண்டு நாள் தேவைக்கான அரிசிகூட இருப்பில் இல்லை என்பதை எனது உரையிலேயே அச்சிட்டே வழங்கியிருக்கிறேன். இதில் ஒன்றும் ஒளிவு இல்லை—மறைவு இல்லை."

காங்கிரசு உறுப்பினர் கேள்வி:— "சென்னையில் குறைவாக இருப்பு இருந்தபோதிலும், அதே நாளில் தஞ்சையிலே இருப்பு இருந்த அரிசியை ஏன் தருவித்திருக்கக்கூடாது?"

அமைச்சர் பதில்:—"முந்திய ஆண்டில், அதே தேதியில் 15,000 டன் அரிசி சென்னையில் இருந்தது. இந்த ஆண்டு அப்படி வைக்கப்பட்டில்லாததற்குக் காரணம், நாங்கள் பொறுப்பேற்கப்போகிறோம் என்பது தானா என்பதை ஆராயத் தேவையில்லை."

"இப்போது நாங்கள் ரேஷன் உள்ள சென்னையிலும், கோவையிலும் 1½ மாதத்துக்குத் தேவையான அரிசியைச் சேமித்து வைத்து இருக்கிறோம். தலைநகரை, 'அன்றுடங் காய்ச்சி'யாக ஆக்கி, தட்டிக் கழித்தது குறித்துப் 'பிரேத விசாரணை' செய்ய நாங்கள் இப்போது விரும்பவில்லை."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

13--7--67

சென்னை சிந்தாதிரிப்பேட்டை

மக்கள் பொதுநல சர்வகட்சிக் குழுச் சார்பில் மாலை 6-30 மணிக்கு ஐயாமுதலித் தெருவில்; தலைவர்: ப. க. வேணுகோபாலன்; பேசுவோர்: அமைச்சர் கே ஏ. மதியழகன், என். வி. நடராசன் எம்.எல்.சி., வி. கே. கோதண்டராமன் எம்.எல்.ஏ., வி. பி. சிந்தன், பாண்டியன் எம்.ஏ.பி.எல்., மற்றும் பலர்.

சென்னை 91-வது வட்டம்

ஔவை நகர் தென்னவர் மன்றத்தின் சார்பில் மாலை 7 மணிக்கு சூளைமேடு பஜனைக் கோயில் தெருவில்; தலைவர்: தெ. அன்பரசு; பேசுவோர்: வேளாண்மை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, சுகாதார அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா, பெ. மலைச்சாமி எம்.ஏ., எம்.எல்.ஏ., மு. கோபால் எம்.எல்.ஏ., செ. மோகனப்பா, இரா. கோதண்டராமன் பி.ஏ., சி. வி. மலையன், து. புருடோத்தமன்.

14--7--67

காஞ்சிபுரம்

நகர தி. மு. கழகச் சார்பில் பாராட்டு விழா; மாலை 6 மணிக்கு கங்கைகொண்டான் மண்டபம் அருகில்; தலைவர்: சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ.; பாராட்டுப் பெறுவோர்: அமைச்சர்கள் கே. ஏ. மதியழகன், எஸ். ஜே. சாதிக்பாட்சா; பாராட்டுவோர்: சி. சிட்டிபாபு எம்.பி., கே. எம். இராசகோபால் எம். எல். ஏ., என். கிருட்டினன் எம்.எல்.ஏ., கே. டி. எஸ். மணி எம்.சி., இரா. வெங்கடேசன், எஸ். முருகேசன்.

திருமணம்

'காஞ்சி' இதழின் துணையாசிரியர் தோழர் **முத்துராமனுக்கும்** புவனகிரி அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியை தோழியர் **இராஜேசுவரிக்கும்** 14-7-67 காலை 8-மணியளவில் ஆடுதுறையடுத்த குறிச்சிமலை மணமகன் இல்லத்தில் முதலமைச்சர் **அறிஞர் அண்ணா** தலைமையில் திருமணம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது